JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

(**Accused present**)
Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) on the 6th day of 15.02.2024

**CC.No.214/2013 Name: Koushika. D/o. Kalamani P.W.1**

மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் நீதிமன்ற அனுமதியுடன் அ.சா.1 அழைக்கப்பட்டு சத்தியபிரமானம் செய்யப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) எந்த தேதியில் எனக்கும், எதிரிக்கும் திருமணம் நடந்தது என்றார்ல 03.06.2011. நானும் ஆஜர் எதிரியும் காதலித்து பெற்றோர்களை கட்டாயப்படுத்தி அவர்களது சம்மதத்தின் பேரில் திருமணம் செய்து கொண்டோம் என்றால் ஆமாம். திருமணம் செய்தபோது நான் படித்துக் கொண்டிருந்தேனா என்றால் இல்லை. B.Sc Computer Science படித்து முடித்துவிட்டேன். திருமணத்திற்கு பின்னிட்டு பெருந்துறை கொங்கு நகரில் குடியிருந்தோமா என்றால் ஆமாம்.

2) திருமணத்தில் என் அம்மாவுக்கு உடன்பாடு இல்லை என்றால் இருவீட்டிலும் பேசித்தான் திருமணம் செய்தோம். எனக்கும், எதிரிக்கும் தகராறு ஏற்பட்டதாக கூறி அது சம்மந்தமாக துடியலூர் காவல் நிலையத்தில் 30.05.2012 ல் நான் புகார் கொடுத்தேனா என்றால் ஆமாம். என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.1 புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் என்றால் சரிதான். புகார் மனுவில் நான்கு மாதமாக கருவுற்றிருந்ததாகவும், அப்போது எதிரி அடித்ததால் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எப்போது அடித்தார் என்றும் அதற்காக எந்த தேதியில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன் என்பதை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை(FAC).

3) எதற்காக துடியலூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்று என்னுடைய வாக்குமூலத்திலும், புகாரிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். மருத்துவ சான்று போலீசார் விசாரணையின் போது கொடுத்தேனா என்றால் இல்லை. எனது முதல் விசாரணையில் என் தோழி பிரவீணா மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சேர்த்ததாக சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். மருத்துவமனையில் அனுமதித்ததை நானும், எனது தோழியும் காவல் நிலையத்தில் தகவல் தெரிவித்தோமா என்றால் இல்லை.

4) எனது தாயாரின் கட்டாயத்தின்பேரில் தான் கருவை கலைத்துக் கொண்டேன் என்றும் அதனால்தான் மருத்துவமனை சிகிச்சையில் சேர்ந்தபோது புகார் கொடுக்கவில்லை என்றும், அதற்கான ஆவணங்களை போலீசாரிடம் கொடுக்கவில்லை என்றும் துர்லாபம் அடையவேண்டி பொய்யாக எதிரி மீது புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. கருகலைப்பு செய்ததை எதிரி தெரிந்து கொண்ட பின்னர் என் மீதும், என் குடும்பத்தார் மீதும் நடவடிக்கை எடுத்துவிடுவார் என்பதால் பொய்யாக எதிரி மீது புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

(xxx..ஒப்பம்)
நீதித்துறை நடுவர்,
பெருந்துறை(FAC).

JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

(**Accused present**)
Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) on the 6th day of 15.12.2024

**CC.No.214/2013 Name: Kumutham W/o. Kalamani P.W.2**

<u>மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் நீதிமன்ற அனுமதியுடன் அ.சா.2 அழைக்கப்பட்டு சத்தியபிரமானம் செய்யப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

## எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1) ஆஜர் எதிரிதான் என் மகளை காதலித்து திருமணம் செய்து கொண்டார் என்றால் ஆமாம். என்னுடைய மகளின் கட்டாயத்தின் பேரில் எதிரிக்கு என் மகளை திருமணம் செய்து கொடுத்தோம் என்றால் இல்லை. எதிரியும், என் மகளும் விருப்பப்பட்டதால் திருமணம் செய்து வைத்தோம். சொந்த ஊர் எது என்றால் மேட்டுப்பாளையம். எந்த தேதியில் எதிரி என் மகளை அடித்து காயப்படுத்தினார் என்பதை எனது சாட்சிய வாக்குமூலத்திலும், புகாரிலும் சொல்லியுள்ளேனா என்றால் தேதி குறிப்பிட்டு சொல்லவில்லை.

2) என் மகள் எத்தனை நாள் மருத்துவ சிகிச்சையில் இருந்தார் என்பதை எனது சாட்சியத்தில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எதிரி அடித்து காயப்படுத்தினார் என்ற விவரத்தை யார் என்னிடம் சொன்னார்கள் என்றால் என் மகளும், அவருடைய தோழியும் என்னிடம் சொன்னார்கள். மருத்துவ சான்றை நானோ, என் மகளோ போலீசார் விசாரணையின் போது கொடுக்கவில்லை என்றால் சரிதான். எதிரி அடித்து அ.சா.1 க்கு கருகலையவில்லை என்றும், என்னுடைய கட்டாயத்தின் பேரில் என் மகள்

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை(FAC).

கருவை கலைத்துக் கொண்டார் என்றால் சரியல்ல. உண்மையில் சம்பவம் நடந்திருந்தால் போலீசார் விசாரணையில் ஆவணங்கள் தாக்கல் செய்திருப்போம் என்றும், அவ்வாறு சம்பவம் நடக்காததால் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

(xxx..ஒப்பம்)
நீதித்துறை நடுவர்,
பெருந்துறை(FAC).

JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

(**Accused present**)
Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) on the 6th day of 15.02.2024

**CC.No.214/2013 Name: Kalamani, S/o.Ramasamy P.W.3**

<u>மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் நீதிமன்ற அனுமதியுடன் அ.சா.3 அழைக்கப்பட்டு சத்தியபிரமானம் செய்யப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

## எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1) என்னுடைய சாட்சிய வாக்குமூலத்தில் சம்பவ சமயத்தில் நானும், என் மனைவியும் விருதாச்சலத்தில் குடியிருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் மகளுக்கு எதிரி அடித்ததால் கருச்சிதைவு ஏற்பட்டதாக என்னிடம் யார் சொன்னார்கள் என்றால் என் மகள் சொன்னார். அதற்கு பிறகு நானும் என் மனைவியும் என் மகளை பார்த்தோமா என்றால் என் மனைவி மட்டும் வந்தார். என் மனைவி வருவதற்கு முன்பாக என் மகள் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டாரா என்றால் அது பற்றி எனக்கு சரியாக தெரியாது.

2) சம்பவம் நடைபெற்றதாக சொால்லும் சமயத்தில் என் மகள் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தாரா என்றால் ஆமாம். என் மகள் பெருந்துறை காவல் நிலையத்தில் புகார் கொடுக்காமல் துடியலூர் காவல் நிலையத்தில் எதற்காக புகார் கொடுத்தார் என்ற விவரத்தை என்னிடம் சொன்னாரா என்றால் சொந்த ஊர் மேட்டுப்பாளையம் என்பதால் துடியலூரில் புகார் கொடுத்தார். துடியலூர் காவல் நிலையத்தில் வைத்து போலீசார் என்னிடம் வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் ஆமாம். நான்

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை(FAC).

சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், அவ்வாறு நடந்திருந்தால் தேதியை குறிப்பிட்டு சொல்லியிருப்பேன் என்றும், என் மனைவியின் கட்டாயத்தின் பேரில் என் மகள் கருகலைப்பு செய்து கொண்டார் என்றும், அதனால்தான் மருத்துவ ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

(xxx..ஒப்பம்)
நீதித்துறை நடுவர்,
பெருந்துறை(FAC).

JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

(**Accused present**)
Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) on the 6th day of 15.02.2024

**CC.No.214/2013 Name: Chandrasekar S/o. Palanisamy P.W.4**

<u>மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் நீதிமன்ற அனுமதியுடன் அ.சா.4 அழைக்கப்பட்டு சத்தியபிரமானம் செய்யப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

## எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1) என் மனைவியும், அ.சா.1 ம் கல்லூரி தோழிகள் என்றால் ஆமாம். எனது சாட்சிய வாக்குமூலத்தில் எந்த தேதியில் அ.சா.1 க்கு கருகலைப்பு ஏற்பட்டது என்பது பற்றி சொல்லவில்லை என்றால் ஆமாம். எந்த தேதியில், எத்தனை மணிக்கு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்பதை முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் ஆமாம். கருகலைப்பு செய்வதற்கு கார்டியன் என்ற முறையில் நானோ, என் மனைவியோ கையொப்பம் செய்தோமா என்றால் இல்லை.

2) அ.சா.1 சட்டத்திற்கு முரணாக கருகலைப்பு செய்து கொண்டார் என்றும், அதற்கு என் மனைவி உடந்தையாக இருந்தார் என்றும், எதிரியின் சட்ட நடவடிக்கையிலிருந்து தப்பிப்பதற்காக அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரின் பேரில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. துடியலூர் காவல் நிலையத்தில் என்னுடைய மனைவி பிரவீணாவை போலீசார் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்றும், பின்னிட்டு ஈரோடு மகளிர் காவல் நிலையத்திற்கு மாற்றப்பட்ட பின்னர் உண்மை தெரிந்து விடும் என்பதால் என் மனைவியை இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை(FAC).

நான் அ.சா.1 க்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்றும், அ.சா.1 ன் குடும்பத்தாருக்கு வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

(xxx..ஒப்பம்)
நீதித்துறை நடுவர்,
பெருந்துறை(FAC).